லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-4 செப்டம்பர் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# தொழில் புரட்சி ஏற்படுமா?

## முதல்வர் பயணம்




# வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து

## பத்தியமில்லா மருந்து

### குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
- கபம் ■ காசம் ■ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ■ பித்தம்



போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# கடும் பொருளாதார பின்னடைவு ஏன்?

நாட்டின் பொருளா தாரத்தை 2025ம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தப் போகிறோம் என்று கடந்த ஜூன் மாதம் மத்திய அரசு பட்ஜெட்டில் மோடி அறிவித்தபோது, பொருளாதார நிபுணர்களே சற்று அதிர்ந்துதான் போனார்கள். ஏனென்றால் பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி அமல் போன்றவற்றால் இந்திய பொருளா தாரமே படுபாதாளத்தை நோக்கி வேகமாக சரிந்து வருவதை அறிந்தவர்கள் அவர்கள். அடுத்தடுத்து வந்த செய்திகள் பொருளாதாரத்தின் உண்மை நிலையை படம் பிடித்து காட்டத் துவங்கின. வாகன உற்பத்தி துறையில் சுமார் ₹45 லட்சம் கோடிக்கு விற்பனையாகாமல் வாகனங்கள் தேங்கி உள்ள நிலையில், 10 லட்சம் பேரின் வேலை வாய்ப்பு பறிபோகும் என்ற அபாய சங்கொலியை கேட்டதும் பதற்றம் அடையாதவர்கள் கிடையாது. அடுத்து, ரியல் எஸ்டேட் துறையில் கட்டி முடிக்கப்பட்ட பல்லாயிரம் வீடுகள் விற்பனையாகாமல் தேங்கி கிடப்பதாக செய்தி. ஐந்து ரூபாய் பிஸ்கட் பாக்கெட் வாங்கவே வாடிக்கையாளர்கள் யோசிக்கிறார்கள் என்று பிரிட்டானியா பிஸ்கட் நிறுவன நிர்வாகி தெரிவித்த மறுநாளே விற்பனை குறைந்ததால் 10 ஆயிரம் தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பப் போவதாக பார்லே பிஸ்கட் நிறுவனம் அறிவித்தது. தொடர்ந்து மூடிஸ் ஆய்வு நிறுவனம் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் குறித்து சந்தேகம் எழுப்ப, நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் 70 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு கடுமையான பொருளாதார மந்தநிலை இந்தியாவில் நிலவுகிறது என்று பட்டவர்த்தனமாக போட்டுடைத்தார்.

இதுவரை, நடப்பது எல்லாமே நன்மைக்கே என்று அமைதியாக இருந்த மத்திய அரசு, விழித்து கொண்டு பல்வேறு துறைகளுக்கு சலுகைகளை அறிவித்துள்ளது. இந்த சலுகைகள் வீழ்ச்சியடைந்து வரும் தொழில் துறையை வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்லும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். மத்திய அரசின் இந்த சலுகைகள் தொழில் துறையை சரிவில் இருந்து காப்பாற்றும் முயற்சிதான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இது வரவேற்கத்தக்க முயற்சிதான். ஆனால், ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை உணர்ந்து, அறிவிக்கப்பட்ட சலுகைகள் அதன் பயனாளிகளான தொழில் துறையினரை சென்றடைவதை அரசு உறுதி செய்ய வேண்டும். கடன் வழங்குவதை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகளுக்கு ₹70 ஆயிரம் கோடி ஒதுக்கப்போவதாக நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். அதோடு கடன் வழங்கும் நடைமுறையை எளிமையாக்க வேண்டும். வாகன துறையில் விற்பனை தேக்கத்துக்கு காரணமே மின்சார வாகன பயன்பாட்டை அதிகரிக்க போகிறோம் என்று மத்திய அரசு முஸ்தீபு காட்டியதுதான். இதற்காக பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு பல கட்டுப்பாடுகள் வரப்போவதாக செய்திகளை கசியவிட்டதே அரசுதான். இப்போது, கட்டுப்பாடுகள் வராது என்று அரசு கூறியுள்ளதை வாடிக்கையாளர்கள் நம்புவார்களா? என்பது சந்தேகமே. அரசின் முயற்சிகளால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் எழுச்சியடையுமா? என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லும்.

**- ஆசிரியர்**

# மோட்டார் வாகனத்துறை

## நம்பிக்கை அளிப்பதாக இல்லை



இந்தியாவின் மோட்டார் வாகனத் துறையானது கடும் சரிவை எதிர்கொண்டுவருகிறது. அனைத்து வகையான வாகனங்களின் உள்நாட்டு விற்பனையும் கடந்த ஆண்டு ஜூலையைவிட தற்போது 19% குறைந்திருக்கிறது. பயணிகள் வாகனத்தின் விற்பனை 31% குறைந்திருக்கிறது. இது கடந்த 19 ஆண்டுகளில் மிகவும் குறைவான விற்பனை. கூடவே, இருசக்கர வாகனங்களின் விநியோகம் 17%, வாகனங்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு விற்பனைக்கு அனுப்பும் தொழில் துறை 26% பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இந்தியப் பொருளாதாரத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அதில் மோசமான மந்தநிலை சமீபகாலமாக நிலவுவது தெரிந்தாலும், மோட்டார் வாகனத் துறையிலிருந்து கிடைக்கும் தரவுகள் அதற்கு உறுதியான சான்றாக அமைகின்றன.

ஒன்பது மாதங்களாகத் தொடர்ந்து பயணிகள் வாகன விற்பனை சுருங்கிக்கொண்டே வருகிறது. இதனால், விற்பனையகங்கள் மூடல்; முகவர்கள், உதிரிபாக விற்பனையாளர்கள், வாகனத் தயாரிப்பாளர்கள் ஆகிய தரப்பில் தொழிலாளர்களை வேலையிலிருந்து அனுப்புதல் என்று கடும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கிடையே மேலும் கடுமையான பணியிழப்புகள் ஏற்படும் என்று 'மோட்டார் வாகன முகவர்கள் சங்கம்' எச்சரித்திருக்கிறது. இப்பிரிவில் பல்லாயிரக்கணக்கானோர் ஏற்கெனவே வேலை இழந்துள்ளனர் என்பது



குறிப்பிடத்தக்கது. ‘இந்திய மோட்டார் வாகன சங்கம்’ தங்கள் துறையில் கடந்த மூன்று மாதங்களில் வேலையிழப்பு நடந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

வங்கிகள் அல்லாத நிதித் துறை நிறுவனங்களில் பணத் தட்டுப்பாடு நிலவுவது, அதனால் வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் கொடுப்பது குறைந்திருப்பது, வாகனக் காப்பீட்டுக்கான தொகைகள் உயர்ந்திருப்பது, கார்கள், மோட்டார் வண்டிகள், ஸ்கூட்டர்கள் போன்றவற்றுக்கு 28% ஜிஎஸ்டி விதிக்கப்படுவது ஆகியவை மோட்டார் வாகனத் துறையில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும் காரணிகளாகக் கூறப்படுகின்றன. கூடவே, கனரக வாகன விற்பனையில் ஏற்பட்டிருக்கும் சரிவு, சரக்குப் போக்குவரத்தோடும் மக்களின் நுகர்வோடும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். வாகன விற்பனையின் எண்ணிக்கை வீழ்ச்சியானது ஒட்டுமொத்த பொருளாதார சுணக்கத்துக்கான அறிகுறியாகவும் பார்க்கப்பட வேண்டும்.

அடுத்து வரும் காலம் என்பது நிச்சயமாக மோட்டார் வாகனத் துறைக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை. சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கி, நுகர்வோர் நம்பிக்கை கருத்துக்கணிப்பை நடத்தியது. அதில் இந்திய நுகர்வோரின் நம்பிக்கை குறைந்திருப்பது தெரியவருகிறது. 63.8% பேர் எச்சரிக்கையோடும் நிதானமாகவும்தான் செலவழிப்போம் என்று கூறியிருக்கின்றனர். இதே நிலையோ அல்லது இதைவிட மோசமான நிலையோ இன்னும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கும் என்று அந்தக் கருத்துக்கணிப்பிலிருந்து தெரியவருகிறது. 2018-ல் இந்தக் கருத்துக்கணிப்பின் முடிவு 37.3% ஆக இருந்தது. மோட்டார் வாகனத் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பது அந்தத் துறையை மட்டுமே சார்ந்ததல்ல; ஒட்டுமொத்த பொருளாதார நிலையின் பிரதிபலிப்பு. உடனடியாக உரிய கொள்கை முடிவுகள் எட்டப்படவில்லை என்றால் பிரச்சினை பூதாகரமாக வெடிக்க வாய்ப்பிருக்கிறது.

**- முனைவர் M. சத்தியராஜ்**

# தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும்

## முதல்வர் பழனிசாமி



சேலத்தில் புதிய அரசு சட்டக் கல்லூரியை திறந்துவைத்த முதல்வர் பழனிசாமி, 'உயர் நீதி மன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக கொண்டுவர மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்' என்று தெரிவித்தார். சேலம் மணியனூரில் சேலம் அரசு சட்டக் கல்லூரி திறப்பு விழா நடைபெற்றது. விழாவில், அரசு சட்டத் துறை செயலர் ரவிக்குமார் வரவேற்றார்.

சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம், வருவாய்த் துறை அமைச்சர் உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டக் கல்லூரியை திறந்து வைத்து, கல்லூரியில் இட ஒதுக்கீடு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கை கடிதத்தை வழங்கி முதல்வர் பழனிசாமி பேசியதாவது: தமிழகத்தில் இந்த ஆண்டு சேலம், நாமக்கல், தேனி ஆகிய இடங்களில் புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன. இக்கல்லூரிகள் இந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும். புதிய சட்டக் கல்லூரிகளில் ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோவை, திருநெல்வேலி சட்டக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.7.70 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது. தெற்காசியாவிலேயே சட்டக் கல்விக்காக தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் திறந்து வைக்கப்பட்ட இந்த பல்கலைக் கழகத்தில் ஆசியாவிலேயே குறைந்த கட்டணத்தில் தரமான சட்டக் கல்வி வழங்கப்படுகிறது.

இந்த சட்டப் பல்கலைக்கழகத்துக்காக, பெருங்குடியில் ரூ.62 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய வளாகமும் திறக்கப்பட்டது. பல்கலைக்கழக விரிவாக்கத்துக்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் 13 சட்டக் கல்லூரிகளில் 11 கல்லூரிகள் அரசு கல்லூரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு விழுப்புரம், ராமநாதபுரம், தருமபுரி ஆகிய இடங்களில் புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றுக்கு சொந்த கட்டிடம் கட்டும் பணி விரைவாக நடைபெறும். ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் உருவாக்கப்பட்டது. அவர் மேற்கொண்ட முயற்சி காரணமாக, உச்சநீதிமன்ற தீர்ப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழை கொண்டு வர வேண்டும் என்று

மத்திய அரசிடம் அதிமுக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. நீதிமன்றங்களில் மின்னணு ஆளுமை முறையை கொண்டுவர, மின்னணு முத்திரைத்தாள் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீதித் துறையை கணினிமயமாக்குவதற்கு போதிய நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

மாநிலம் முழுவதும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடித்திட, பல்வேறு பதவிகளுக்கு 1,188 பணியிடங்கள் தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களின் தேவைக்கேற்ப அனைத்து உள்கட்டமைப்பு



வசதிகளையும் அரசு ஏற்படுத்தி வருகிறது.

சேலம் அரசு சட்டக் கல்லூரிக்காக, சேலம் - கோவை நெடுஞ் சாலையில் விநாயகா மிஷன் அருகே இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் புதிய சட்டக் கல்லூரி ஓராண்டுக்குள் கட்டி முடிக்கப்படும்.

விழாவில், சட்டத் துறை அமைச் சர் சண்முகம் பேசும்போது, “தமிழகத்தில் 10 ஆண்டுகளாக புதிய சட்டக் கல்லூரிகள் திறக்கப்படாமல் இருந்தது. தற்போது 3 ஆண்டுகளில் புதிதாக 6 சட்டக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு விழுப்புரம், ராமநாதபுரம், தருமபுரி ஆகிய இடங்களில் திறக்கப்பட்ட சட்டக் கல்லூரிகளில் புதிய கட்டிடங்கள் கட்ட தலா ரூ.70 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன” என்றார்.

- K. ரமேஷ்குமார்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை ®
மக்களின் மனக்குமுறல் மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-8 இதழ்-4 செப்டம்பர்-2019

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

இதழியல் ஆலோசகர்
P. ஆறுமுகம், B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
வீ.சிவசங்கரன், B.B.A.,

துணை ஆசிரியர்கள்
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

முதன்மை செய்தியாளர்கள்
S.ராம்குமார் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
A.பாலகிருஷ்ணன் கோவை, நாகராஜ் மூணாறு
R.ஜெயா தென்சென்னை, K.அழகர்சாமி வட சென்னை
S.ரமேஷ் காஞ்சி, மாரிமுத்து உளுந்தூர்பேட்டை
சுசி ஈஸ்வர் விருதுநகர், N.சிலம்பரசு தர்மபுரி
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி, குருபாலகிருஷ்ணன்

நிருபர்கள்
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், N.சீனிவாசன்
R.பார்த்தசாரதி, G.ஆனந்த்குமார், S.மோகன்

சட்ட ஆலோசகர்கள்
M.குணசீலன் B.Com., M.L., M.சுதாகர் B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : M.அருணாச்சலம்

இதழ் வடிவமைப்பு : ஆப்பிள் பிரிண்டர்ஸ்

நிர்வாக அலுவலகம்
மக்கள் விசாரணை


எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# சாகாக் கலை

## எனப்படும்

# காயகல்பம்

### வள்ளலார் அருளிய கல்ப மருந்து

Dr. K. ராஜமாணிக்கம்

இந்த பிரணவக் கற்பம் ஆற்றல்மிக்கது. எல்லாவகை நோயையும் போக்கக் கூடியது. நரை, திரை, மூப்பு என்னும் மூன்றையும் போக்கி உடலைக் காப்பது என்பர்.

**விண்கொள்ளாச் சுண்ணத்தை யென்ன சொல்வேன்**
**வியாதி யென்றால் கடுகளவு கொடுத்துப் பாரு**
**எள்ளளவு நாவுமேல் இட்டுப் பாரு**
**தாகமென்ற பசிபோச்சு தன்மை யாச்சே**
**பேச்சேது கற்பமுண்டால் திரேகந் தானும்**
**பிலத்ததடா நரைதிரையும் ஓடிப் போகும்**

என்று கற்பத்தின் சிறப்பு உரைக்கப்பட்டது. வியாதி என்றால் கடுகளவு கொடுத்துப் பாரு என்று கூறப்படுவதிலிருந்து இந்த கற்பத்தின் சிறப்பு என்ன வென்று உணர முடியும். சித்தர்கள், தாங்கள் உண்டு வந்த கற்பப் பொருளில் கெந்தகம், பாதரசம், உப்பு என்னும் மூன்றுபொருள்களை மூலப்பொருளாகக் கொண்டு பிரணவக் கற்பத்தைத் தயாரித்திருக்கின்றார்கள் எனத் தெரிய வருவதால், இம்மூன்றையும் இணைத்தால் வேதியல் முறையில் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்பதை அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்தால், சித்தர்கள் பெற்ற பயன்கள் மனிதர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ததாக இருக்கும்.

**சித்தர் நூல்களில் குறியீட்டு முறைகள்**: சித்தர் நூல்களில் சில சொற்கள் 'கலைச் சொற்கள்' போலக் காணப்படுகின்றன. அச்சொற்கள், சித்தர்கள் கூறக் கருதிய பொருளைக் குறிக்கும் மூலக் குறியீடுகள் எனலாம்.



**நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்** என்னும் ஐந்தின் தொகைச் சொல்லாகப் 'பஞ்சபூதம்' கூறப்படுகிறது. அவை 'நமசிவாய' என்னும் குறியீட்டினாலும் குறிப்பிடப்படுகிறது.

ந: மண்
ம: நீர்
எனக் கொள்வர்.

மண் + நீர் சேர்ந்தால், மண்ணில் நீர் கலந்தால், உயிர் உண்டாகும் என்பதை 'நம' என்றும் 'நமோ' என்றும் குறிப்பிடப்படும்.

அனைத்துப் பொருள்களிலும் மண், நீர் குணம் இருக்கிறது. இதனை நாதம், விந்து என்பர். வலப்புற நாசி வழியே இயங்கும் மூச்சுக் காற்று ஆண் அல்லது விந்து என்றும், இடப்புற நாசி வழியே இயங்கும் மூச்சுக் காற்று பெண் அல்லது நாதம் என்றும் இரண்டு நாசிகளிலும் இயங்கும் மூச்சுக் காற்று உயிர் என்றும் கரு என்றும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு குறிப்பிடப்படுகின்ற மூலக் குறியீடுகள், தோற்றம், பிறப்பு, யோகம், ஞானம், முத்தி போன்ற பொருள் களை விளக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் உட்பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

அவை வருமாறு: **இணையாக வரும் சொற்கள்:**

1. ஆண் பெண்
2. விந்து நாதம்

*3. காரம் சாரம்*
*4. உப்பு புளி*
*5. நட்பு பகை*
*6. சத்துரு மித்துரு*
*7. சூரியன் சந்திரன்*
*8. வலது இடது*
*9. எட்டு இரண்டு*
*10. அகரம் உகரம்*
*11. சூரியகலை சந்திரகலை*
*12. வலக்கண் இடக்கண்*

*கலைச் சொற்களாகக் குறிப்பிடப்படும் ஒற்றைச் சொற்கள்: 1.பஞ்சபூதம் 2.நமசிவாய 3.ஓம் 4.பிரணவம் 5.ஐம்பத்தொன்று 6.கைலாயம் 8.சாகாக்கால் 9.போகாப்புனல் 10.வேகாத்தலை 11.ஆகாயகங்கை 12.அமுதம் 13.வானமுதம் 14.முப்பூ போன்றவை குறிப்பிடத் தக்கவை.*

**மருந்துகளில் ஆண் பெண் குறியீடு**: *உயிரினங்களில் ஆண் பெண் குறியீடு இருப்பதைப் போல, மருந்துகளிலும் அக்குறியீடுகள் காணப்படுகின்றன. அக்குறியீட்டு முறை மருந்துகளின் சேர்க்கைக்குப் பயனுடையதாகத் தெரிகிறது. ஆண் பெண் சேர்க்கையால் மற்றொரு உயிர் உருவாவதைப் போல ஆண் பெண் மருந்துகளின் சேர்க்கையினால் மற்றொரு மருந்து உருவாவதாக உரைக்கப் படுகிறது. இவ்வாறான சேர்க்கைகள் மருந்து, வாதம், யோகம் ஆகிய முறைகளிலும் காணப்படுகிறது. ஆண் பெண் மருந்துகள் வருமாறு:*

**ஆண் மருந்து பெண் மருந்து**: *தங்கம், இரும்பு, வீரம், சூதம், மனோசிலை, செம்பு, லிங்கம், காந்தம், கல்லுப்பு, வெடியுப்பு, கெந்தி, நிமிளை, இந்துப்பு, சூடன், அப்பிரகம், கௌரி, படிகாரம், துரிசு, வெங்காரம், பேதி, சிலாசித்து, கற்பூரம். நாகம், பொன்னம்பர், கல்மரம், காடி.*

**சாகாக்கால், வேகாத்தலை, போகாப்புனல்**: *சாகாத கால், வேகாத தலை, போகாத புனல் என்னும் மூன்றும் குறியீட்டுச் சொற்களாகும். இம்மூன்றும் வைத்தியம், வாதம், ஞானம் ஆகிய மூவிடங்களிலும் இடம் பெறும்.*



**நவிலுவேன் சாகாக்கால் சூத மென்பார்**
**நவிலுவேன் நான்போகாப் புனலைக் கேளு**
**காந்தமது அப்பினிலே தாழ்த்தி டாமல்**
**அவிலுவேன் மிதந்து சென்றால் வாய்ப்பாச் சப்பா**
**அக்கினியில் புகையாத கெந்தி வாய்த்தால்**
**நவிலுவாய் நீ வேகாத் தலையென் றப்பா**

*என்றதனால், சாகாக்கால், இரசம். இரசத்தை முறைப்படி மணியாகக் கட்டுதல், வேகாத்தலை, கெந்தகம். நெருப்பில் புகையாமல் கட்டுதல், போகப்புனல், காந்தம். தண்ணீரில் மூழ்காமல் மிதத்தல் எனக் கொள்ளப்படும். ஆனால் இவை மருத்துவத்துக்கு மட்டுமே பொருளாகும்.*

**சாகாத காலதுவே அறுகோ ணந்தான்**
**தனிவேகாத் தலையதுவே மூலமாகும்**
**போகாத புனலதுவே புரவெளி தானப்பா**

*என்றதனால், முறையே அறுகோணம், மூலம், புரவெளி என்னும் மூன்று இடங்களைச் சுட்டுவதாக அமையும். இவை யோகத்துக்குரிய இடங்களாகக் கொள்ளலாம். யோகத்தில், அடி, நடு, முடி என்னும் மூன்று இடங்களாக மூலாதாரம், சுழுமுனை, புரவெளி என்னும் உச்சி ஆகியவை இம்மூன்றின் இடங்களாகக் கருதுவர்.*

*மேற்கண்ட இம்மூன்றின் இடங்களும் ஞானத்திற்குரிய இடங்களாகத் திரு அருட்பா (சற்குணமணி மாலை. பா.7), அகத்தியர் கற்ப சூத்திரம் (பா.10), சட்டமுனி வாத காவியம் (பா.23), யாகேபு சூத்திரச் சுருக்கம் (பா. 144), அகத்தியர் பரிபாஷை (பா. 21), அகத்தியர் ஞானம்12 (பா. 12) எனப்பல நூல்களில் இடம் பெறுகின்றன. சித்தர்நூல்களில் பெரும் புதிராக விளங்கும் இம்மூன்றும் மறைமொழிச் சொற்களாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.*

**- தொடரும்**

# மனித ஆரோக்கியத்திற்கும், எதிர்காலத்துக்கும் மிகப்பெரிய தீங்கு விளைவிக்கும்

# போலிகள்

போலி தயாரிப்புகள் இந்திய சந்தையை ஆக்கிரமித்து வருவது கவலைக்குரிய விஷயம். இதனால் அரசுக்கும், நிறுவனங்களுக்கும் ஆண்டுக்கு ₹1.05 லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்படுவதாக 'ஆதென்டிகேஷன் சொல்யூஷன் புரவைடர்ஸ் அசோசியேஷன்' என்ற அமைப்பு தகவல் வெளியிமீமீட்டுள்ளது. முக்கியமாக, மருந்து, உணவு மற்றும் ஜவுளி பொருட்களில் போலி தயாரிப்புகள் அதிகளவு இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது. முறையான ஆய்வு, கண்காணிப்பு மூலம் மட்டுமே இதனை கட்டுப்படுத்த முடியும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

ASPA
Authentication Solution Providers' Association
Diverse technologies, common goal

மருத்து உற்பத்தி துறையில் அதிகளவு போலிகள் புழங்குவது பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. இது நேரடியாக மனித உயிர்களுடன் விளையாடும் செயல். போலிகளை கட்டுப்படுத்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. ஆனாலும், போலிகளை ஓரளவுக்கு மேல் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் உணவு மற்றும் மருந்துகளை நுகர்வோர் மிகவும் கவனமாக வாங்க வேண்டியது



கட்டாயம். மருந்துகளில் போலிகளை கண்டுபிடிப்பது சிரமமானது தான் என்றாலும், சில வழிமுறைகளை பின்பற்றி கண்டறியலாம்.

அதாவது, மருந்து பாட்டிலின் மூடியில் ஏதாவது கீறல் உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். அடிக்கடி வாங்கும் மருந்தின் விலை வழக்கமான விலையை விட குறைவாக இருந்தால் விசாரிக்க வேண்டும். சில நேரங்களில் மருந்து உட்கொண்ட பிறகு ஒவ்வாமை பிரச்னை ஏற்பட்டால், உடனே மருத்துவர்களை பார்ப்பது நல்லது. மேலும், உணவு பொருட்களின் மீது போலி ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை



செய்யப்படுகிறது. அதிகாரிகள் அடிக்கடி ஆய்வு செய்வதன் மூலம் இவற்றை கட்டுப்படுத்தலாம். போலி தயாரிப்புகளை எப்படி கண்டுபிடிப்பது என்பது குறித்த விழிப்புணர்வு இல்லாததால், நுகர்வோருக்கு சிக்கல் ஏற்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியாமல் போலி தயாரிப்புகளை சந்தையில் விற்பனை செய்வது அவ்வளவு எளிதான விஷயம் இல்லை என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். போலி தயாரிப்புகளுக்கு பின் மிகப்பெரிய நெட்வொர்க் செயல்படுகிறதாம். மருந்துகளில் போலி தயாரிப்புகளை கண்டுபிடிக்க ரகசிய குழு ஒன்றை அரசு அமைக்க வேண்டும். அந்த குழு போலி மருந்து, உணவு பொருட்கள் எங்கு தயாரிக்கப்படுகிறது? நாட்டின்



எந்தெந்த பகுதிகளுக்கு அதிகமாக அனுப்பப்படுகிறது? சந்தையில் அவற்றை எவ்வாறு நுழைக்கின்றனர் என்பதை கண்டறிய வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே போலி தயாரிப்புகளை கட்டுப்படுத்த முடியும். உணவு, மருந்து தயாரிப்பில் போலிகள் இருப்பது மனித ஆரோக்கியத்திற்கும், எதிர்காலத்துக்கும் மிகப்பெரிய தீங்கு விளைவிக்கும்.

**- V. அருணாச்சலம்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை * அருணை முரசு

## Cell : 93821 33334 / 044 - 48615321

**Email : writermouriyan@gmail.com**

பொருளாதார சரிவை ஒப்புக்கொண்டு அதை சீர்திருத்தவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கை : இந்திய பொருளாதாரமும், சந்தைகளும் மந்தநிலையை எதிர்கொண்டு வரும் நிலையில், அவற்றை



# பொருளாதார சரிவை ஒப்புக்கொண்டு

# சீர்திருத்த நடவடிக்கையை எடுங்கள்

## ராமதாஸ் வலியுறுத்தல்



சமாளிப்பதற்கான சில நடவடிக்கைகளை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார். மந்த நிலையை சமாளிக்க அவை ஓரளவு உதவும் என்ற போதிலும், இந்தியா எதிர்கொண்டு வரும் பொருளாதார சிக்கலின் தீவிரத்துடன் ஒப்பிடும் போது, இவை யானை பசிக்கு சோளப்பொறியாகும். மத்திய நிதியமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் வரவேற்கத்தக்கவை என்றாலும் கூட, அவற்றின் தாக்கம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தான் இருக்கும். ஆனால், மந்தநிலையிலிருந்து பொருளாதாரத்தை மீட்க இந்த அறிவிப்புகள் போதுமானவை அல்ல. பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி. வரி விதிப்பு ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டதால் சிறு தொழில் துறையில் ஏற்பட்ட பாதிப்புகள் படிப்படியாக அதிகரித்து தான் இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது. இதை அரசு ஒப்புக்கொள்ள வேண்டும். அப்போது தான் இதிலிருந்து மீண்டு வருவதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்த முடியும்.

ஆனால், உலக அளவில் பொருளாதார வளர்ச்சி 3.20% ஆக குறைந்து இருந்தாலும், இந்தியப் பொருளாதாரம் எந்த பின்னடைவையும் சந்திக்கவில்லை என்று நிதியமைச்சர் கூறுகிறார். இந்தியப் பொருளாதார வளர்ச்சியும், ஏற்றுமதியும் கடந்த ஆண்டுகளில் இருந்ததை விட நடப்பாண்டில் குறைந்து விட்டதையே அரசு ஒப்புக்கொள்ளவில்லை. இது வளர்ச்சிக்கு வழி வகுக்காது. இந்தியப் பொருளாதாரம் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத நெருக்கடியை சந்தித்து வருகிறது என்று நிதி ஆயோக் அமைப்பின் துணைத்தலைவர் ராஜீவ் குமார் கூறியிருக்கிறார். இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி.ரங்கராஜன் உள்ளிட்ட பொருளாதார வல்லுனர்களின் கருத்தும் இதையொட்டியே உள்ளது. எனவே, இந்திய பொருளாதாரத்தின் சரிவை ஒப்புக்கொண்டு, அதை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முன்வர வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

- அகிலாண்டேஸ்வரி

# கொக்கரிக்கும் இந்தியா பதுங்கும் பாகிஸ்தான்



ஜம்மு-காஷ்மீர் மக்களின் உணர்வுகளுக்கு ஆதரவு தெரிவிக்கும்வண்ணம் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரை வெளியேற்றுதல், வணிக உறவுகளை முறித்துக்கொள்ளுதல், ஆகஸ்ட் 15-ஐ கருப்பு தினமாக அனுசரித்தல் ஆகிய முடிவுகளை பாகிஸ்தான் எடுத்திருப்பது தேவையற்றது என்பதோடு, காஷ்மீர் மக்களுக்குத் தன்னாலான சிக்கல்களைக் கொடுக்கும் போக்கை அது தொடரும் அணுகுமுறையாகவே பார்க்க வேண்டியிருக்கிறது.

காஷ்மீருக்குச் சிறப்புரிமை அளிக்கும் சட்டப் பிரிவு 370-ஐ நீக்கியது குறித்தும், ஜம்மு-காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருப்பது குறித்தும் இந்தியக் குடிமைச் சமூகம் இரு பிரிவாக விமர்சிப்பதற்கும் விவாதிப்பதற்கும் இங்குள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால், 'இது இந்தியாவின் உள்விவகாரம்' என்று இந்திய வெளியுறவுத் துறை சரியாகச் சொன்னதுபோல் இந்த விவகாரத்தில் தலையிட பாகிஸ்தானுக்கு எந்த உரிமையும் இல்லை. மேலும், காஷ்மீர் மக்கள் ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடத் தேவையற்ற கூடுதல் பாதுகாப்பு, கண்காணிப்புச் சூழலுக்குள் அகப்பட்டிருக்கவும் இன்றைய நெருக்கடியான நிலை அவர்களைச் சூழவும் கூட பாகிஸ்தான் அரசின் தேவையற்ற தலையீடும், அது காஷ்மீரை முன்வைத்து நடத்திக்கொண்டிருக்கும் அசிங்கமான அரசியலும்தான் முக்கியமான காரணம். ஜம்மு-காஷ்மீர் மாநில முதல்வர்களை 'பொம்மைகள்' என்றே இதுவரை பாகிஸ்தான் விமர்சித்துவந்திருக்கிறது. ஜம்மு-காஷ்மீர் அரசையும் அது அங்கீகரித்ததே இல்லை. இந்தச் சூழலில் சட்டப் பிரிவு 370 காஷ்மீர் மக்களின் நலனோடு தொடர்புடையது என்பதை பாகிஸ்தான் முதன்முறையாக இதன் மூலம் ஒப்புக்கொண்டிருப்பதும், அது பறிபோய்விட்டதே என்று பதறுவதும் வேடிக்கையாக இருக்கிறது.

இனி வரும் நாட்களில் ஐநாவில் காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் எழுப்பவும், இஸ்லாமியக் கூட்டுறவு அமைப்பின் ஆதரவைத் திரட்டி நட்புறவு நாடுகளுக்குத் தூது அனுப்பவும் திட்டமிடலாம். கடந்த சில தசாப்தங்களாக இந்தியாவின் பொருளாதாரச் செல்வாக்கு மிகப் பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது. காஷ்மீர் விவகாரத்தை சர்வதேசப் பிரச்சினையாக ஆக்க பாகிஸ்தான் முயலும் என்றால், அதை எதிர்கொள்ள மிகச் சரியான இடத்தில் இந்தியா தன்னைப் பொருத்திக்கொண்டிருக்கிறது. ஆக, இப்படியான நகர்வுகள் ஒவ்வொன்றும் இந்தியா - பாகிஸ்தான் உறவை மேலும் பாதிக்குமே தவிர, எந்த வகையிலும் பாகிஸ்தானின் நோக்கங்களுக்குப் பலன் கிடைக்கப்போவதில்லை.

இனியேனும் காஷ்மீர் விவகாரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தன்னுடைய நாட்டு முன்னேற்றத்தில் பாகிஸ்தான் அரசு கவனம் செலுத்துவது உண்மையில் பாகிஸ்தான் மக்களுக்கு மட்டும் அல்லாமல், காஷ்மீர் மக்களுக்கும் செய்யும் நன்மையாக அமையும். ஒருவகையில் பயங்கரவாதத்திலிருந்து அது விடுபடவும் இது வழிவகுக்கும். வெளியுறவு என்பது இரு நாடுகளுக்கு இடையிலான தகவல் தொடர்புகள் திறந்திருக்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான வாசல்; அதை ஒரு நாடு மூட முற்படுவதானது தன்னைத்தானே ஒடுக்கிக்கொள்வதுதான். பாகிஸ்தான் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**- கனகதுர்கா**

# தொழில் புரட்சி ஏற்படுமா?

## முதல்வர் பயணம்

மூன்று நாடுகளுக்கு அரசு முறைப்பயணமாக புறப்பட்ட முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முதற்கட்டாக துபாய் வழியாக லண்டன் சென்றடைந்தார். இங்கிலாந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணித் தரத்தின் மேம்பாடுகளை தமிழகத்தில் செயல்படுத்த இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணித் தரத்தின் மேம்பாடுகளை தமிழகத்தில் செயல்படுத்த இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின் பணித் தரத்தின் மேம்பாடுகளை தமிழகத்தில் செயல்படுத்த இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை தொடர்பான 3 ஒப்பந்தங்களில் முதல்வர் தலைமையில் கையெழுத்திடப்பட்டுள்ளது. சுகாதாரத்துறை தொடர்பான 3 ஒப்பந்தங்களில் முதல்வர் தலைமையில் கையெழுத்திடப்பட்டுள்ளது.



சுகாதாரத்துறை தொடர்பான 3 ஒப்பந்தங்களில் முதல்வர் தலைமையில் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் முதலமைச்சர் கையெழுத்திடும் போது தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் உடனிருந்தார். இந்த ஒப்பந்தத்தில் முதலமைச்சர் கையெழுத்திடும் போது தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் உடனிருந்தார். இந்த



ஒப்பந்தத்தில் முதலமைச்சர் கையெழுத்திடும் போது தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரும் உடனிருந்தார்.

பின்பு இங்கிலாந்தில் செயல்படுத்தப்படும் அவசர ஊர்தி சேவையை முதல்வர் பார்வையிடுகிறார். மலேரியா உள்ளிட்ட தொற்று நோய்களை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்துவது, நோய்களை கையாளும் வழிமுறைகள் உள்ளிட்டவற்றை தமிழகத்தில் செயல்படுத்த அறிக்கை ஒன்றில் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பின்பு இங்கிலாந்தில் செயல்படுத்தப்படும் அவசர ஊர்தி சேவையை முதல்வர் பார்வையிடுகிறார். மலேரியா உள்ளிட்ட தொற்று நோய்களை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்துவது, நோய்களை கையாளும் வழிமுறைகள் உள்ளிட்டவற்றை தமிழகத்தில் செயல்படுத்த அறிக்கை ஒன்றில் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பின்பு இங்கிலாந்தில் செயல்படுத்தப்படும் அவசர ஊர்தி சேவையை முதல்வர் பார்வையிடுகிறார். மலேரியா உள்ளிட்ட தொற்று நோய்களை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்துவது, நோய்களை கையாளும் வழிமுறைகள் உள்ளிட்டவற்றை தமிழகத்தில் செயல்படுத்த அறிக்கை ஒன்றில் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**- ஆசிரியர்**

# கேஷ்லெஸ் இந்தியா கிராமங்களுக்கு சாத்தியமா?




கையில் பணத்தையே தொடக்கூடாத அளவுக்கு அத்தனை பரிவர்த்தனைகளையும் டிஜிட்டல் மயமாக்க துடித்து வருகிறது மத்திய அரசு. பேடிஎம்களை ஊக்கப்படுத்தும் வேளையில் ஏடிஎம்களை நிரந்தரமாக மூடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதாவது டெபிட் கார்டுகளை முற்றிலும் ஒழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 130 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் பெருநகரங் களில் வாழும் மக்கள் மட்டுமே டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைக்கு பழக்கப்பட்டு வருகின் றனர். அவர்களிலேயே இன்னும் பெரும் பாலானோர் பணப்பரிவர்த்தனையில் தான் இருக்கிறார்கள். பெருநகரங்களின் நிலையே இப்படி என்றால் டிஜிட்டல் இந்தியாவில் கிராமங்களின் கதி? கடந்த ஆண்டு அக்டோபரில் கிட்டத்தட்ட 100 கோடி டெபிட் கார்டுகள் புழக்கத்தில் இருந்தன. அதன்பின் டெபிட் கார்டுகள் எண்ணிக்கை குறையத்தொடங்கி விட்டது. நவம்பரில் 99 கோடியாகவும், டிசம்பரில் 95 கோடியாகவும், 2019 ஜனவரியில் 93 கோடியாகவும் குறைந்து விட்டது. இப்போது 90 கோடியாக குறைந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே போல் பாயிண்ட்ஆப் சேல்ஸ் எந்திரம் மூலம் பணப்பரிவர்த்தனை செய்யும் தொகையும் குறைந்துவிட்டது.

2018 அக்டோபரில் 54,298 கோடி பணப்பரிவர்த்தனை நடந்தது. 2019 ஜனவரியில் ₹50,684 கோடியாக குறைந்து இருக்கிறது. நமது நாட்டில் 2019 ஜனவரி கணக்குப்படி 45 கோடி கிரெடிட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் 16 கோடி முறை பரிவர்த்தனை நடந்துள்ளது. கிரெடிட் கார்டு பணப்பரிவர்த்தனை ரூ,3400 கோடியாக உயர்ந்து இருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்துதான் டெபிட் கார்டுகளை ஒழித்துவிட்டு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கொண்டு வரப்போவதாகவும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் டெபிட் கார்டு தேவை இருக்காது என்றும் எஸ்பிஐ தலைவர் ரஜினிஷ்குமார் தெரிவித்துள்ளார். மத்திய அரசின் முக்கிய திட்டங்கள் அனைத்தும் எஸ்பிஐ மூலம் வெளிவருவதால் இதுவும் அதன் ஒரு பகுதியாகத்தான் இருக்கும். எனவே அனைத்து வங்கிகளும் இதை பின்பற்றத்தொடங்கும்.

ஆனால் நமது மக்கள் பணத்தை பயன்படுத்தி பழக்கப்பட்டவர்கள். அதனால்தான் டெபிட் கார்டுகளை பாயின்ட் ஆப் சேல் மூலம் பணம் செலுத்த பயன்படுத்திய எண்ணிக்கை 2019 ஜனவரியில் 37 கோடியாக உள்ளது. ஆனால் பணம் எடுக்க 88 கோடி முறை பயன்படுத்தி




இருக்கிறார்கள். மேலும் பெருநகரத்து மக்களே பணப்புழக்கத்தில் இருந்து விடுபடாத போது கிராமப்புற மக்கள் பற்றி கேட்கவே வேண்டாம். டிஜிட்டல் மயத்தை வளர்ச்சியின் ஒரு காரணியாகத்தான் பயன்படுத்த வேண்டும். இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றார் மகாத்மா காந்தி. கிராமப்புறம் வரையிலும் டிஜிட்டல் மய சேவையை ஊக்குவித்து, புரட்சி செய்தபின் பணமில்லா டிஜிட்டல் மயம் என்றால் சாத்தியம். இல்லை என்றால் கிராமங்களின் கதி அதோகதியாகி விடும்.

**- குருதேவ்**

**2017**-18ம் நிதியாண்டில் மத்திய அரசு அளித்த நிதியுதவியில் ரூ.3,600 கோடியைப் பயன்படுத்தாமல் தமிழக அரசு திருப்பி அனுப்பியிருக்கிறது என்கிறது தலைமை கணக்குத் தணிக்கையாளர் அளித்துள்ள அறிக்கை. இதையொட்டி எழுந்த விமர்சனங்களுக்கு சேலத்தில் நடந்த பொருட்காட்சி விழாவில் பதிலளித்திருக்கிறார் தமிழக முதல்வர் பழனிசாமி. 'தமிழக அரசு நிதியைத் திருப்பி அளிக்கவில்லை. குறிப்பிட்ட நிதியாண்டில் மாநில அரசால் எதிர்பார்க்கப்பட்டு மத்திய அரசால் விடுவிக்கப்படாத நிதியானது சேமிப்பாகவே கருதப்படும். அடுத்த நிதியாண்டில் மத்திய அரசிடமிருந்து அந்நிதி பெறப்படும்போது மாநில அரசால் நிதியறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்படும்' என்பது முதல்வரின் பதில்.

சமூக நலத் திட்டங்களுக்காக மத்திய அரசால் வேண்டிய பணிகளில் காட்டப்பட்ட அலட்சியமும் அநியாயமான காலதாமதமும்கூடத்தான்.

பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியினரில் ஏழை எளியவர்கள் வீடு கட்ட நிதியுதவி செய்யும் பிரதம அமைச்சரின் 'ஆவாஸ் யோஜனா' திட்டத்தின் கீழ் மத்திய அரசும் மாநில அரசும் முறையே 60:40 பங்களிக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ.3,082 கோடி. இதில் மாநில அரசு செலவிட்டிருப்பது வெறும் ரூ.728 கோடி மட்டுமே. செலவழிக்கப்படாமல் ரூ.2,354.38 கோடி திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம், குறிப்பிட்ட அந்த நிதியாண்டுக்குள் திட்டத்துக்கான பயனாளிகளை அடையாளம் காண்பதில் தமிழக அரசு தவறிவிட்டதுதான். இதைத் தணிக்கை அறிக்கை மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறது.

# நிர்வாகத் திறனின்மையை

ஒதுக்கப்பட்ட நிதியை தமிழகம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு அல்ல. தலைமை கணக்குத் தணிக்கையாளரின் வருடாந்திர அறிக்கையில் இடம்பெற்றுள்ள விவரம். தமிழக அரசு தமக்கு ஒதுக்கப்பட்ட தொகையைத் திருப்பித் தந்துவிட்டது என்று மட்டுமே அந்த அறிக்கை குறிப்பிடவில்லை. தொகை பயன்படுத்தப் படாததற்கான காரணங்களையும் பட்டியலிட்டிருக்கிறது.





14-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.5,920 கோடி. இவற்றில் தமிழக அரசு செலவழித்திருப்பது ரூ.2,243 கோடியை மட்டும்தான். எஞ்சிய தொகையை தமிழக அரசு செலவழிக்காததற்குக் காரணம், தமிழக முதல்வர் குறிப்பிடுவதுபோல மத்திய அரசு ஒதுக்கிய தொகையை உரிய நேரத்தில் வழங்காதது மட்டுமல்ல; மாநில அரசு ஆற்ற

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 'ஆவாஸ் யோஜனா' திட்டத்துக்கான பயனாளிகளைக் கண்டறியும் பொறுப்பை உள்ளூர் பஞ்சாயத்து அமைப்புகள், ஊரக மேம்பாட்டு அமைப்புகள், மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவை ஏற்றுக்கொண்டிருந்தன. இத்தனை அமைப்புகள் இருந்தும் வீடு கட்டிக்கொள்வதற்கு வழியில்லாத ஏழை எளியவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை யார்தான் நம்ப முடியும்?

கிராமப்புறங்களில் நிலவிவரும் கடும் வறட்சியிலிருந்து மக்களைப் பாதுகாத்துவரும் நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டத்துக்கான தொகையிலும்கூட ரூ.247.84 கோடி செலவழிக்கப்படவில்லை. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.23.84 கோடியும் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்புக்கு உதவுவதற்காக உலக வங்கி

# உடனடியாக சரி செய்ய வேண்டும்

ஒதுக்கீடு செய்த ரூ.100 கோடியில், ரூ.2.35 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் அளித்திருக்கும் பதிலில், இதைப் பற்றியெல்லாம் எந்தக் குறிப்பும் இல்லை. மொத்தத்தில், வளர்ச்சித் திட்டங்களில் தமிழக அரசு காட்டுகிற அக்கறையையும் ஆர்வத்தையும் சமூக நலத் திட்டங்களில் காட்டவில்லை என்பதுதான் தணிக்கை அறிக்கையிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்தி. மத்திய அரசால் சமூக நலத் திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படவில்லை என்றால் அது சேமிப்பாகவே கருதப்படும்.

அடுத்த நிதியாண்டில் அந்நிதி செலவழிக்கப்படும் என்பதெல்லாம் மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு ஏற்பாடுகள். அதையெல்லாம் சொல்லி தமிழக முதல்வர் தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. அவரை நோக்கி எழுப்பப்பட்டிருக்கும் கேள்வி, திருப்பி அனுப்பப்பட்ட நிதி என்னவாகும் என்பதல்ல; நிதியைத் திருப்பி அனுப்பியது ஏன் என்பதுதான்.

மத்திய அரசு அளித்த நிதியுதவியை தமிழக அரசு பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க, மாநில அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்த நிதியையும்கூட முறையாகச் செலவழிக்கவில்லை என்பதையும் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது. 2017-18 நிதியாண்டில் மட்டும் நிதியறிக்கையில் ஒதுக்கப்பட்ட ரூ.28,029 கோடியைச் செலவழிக்கவில்லை. ஊரக மேம்பாட்டுத் துறை, நிதித் துறை, பள்ளிக் கல்வித் துறை, நகராட்சி நிர்வாகம், நீர் விநியோகம், நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படவில்லை. பள்ளிக் கல்வித் துறையில் மட்டுமே சர்வ சிக்ஷன் அபியான் உள்ளிட்ட வெவ்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.1,627 கோடி செலவழிக்கப்படவில்லை.

கடந்த ஐந்தாண்டுகளில், தமிழக அரசு தனது நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய



தொகையில் செலவழிக்காத தொகை ரூ.1.22 லட்சம் கோடி. ஒவ்வொரு ஆண்டும் இப்படி நிதியறிக்கையில் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்வதும், அதைப் பயன்படுத்தாமல் 'சேமிப்பதும்' அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம், நிதி மேலாண்மையில் இருக்கிற திறனின்மைதான் என்று தலைமை கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையே சுட்டிக்காட்டுகிறது. தொகுப்பு நிதியிலிருந்து அதிக வட்டியில் பெறுகிற தொகையைத் திட்டங்களுக்குப் பயன்படுத்தாமல் ஒவ்வொரு அரசுத் துறையும் குறைந்த வட்டியில் சேமிப்புக் கணக்கில் பாதுகாத்துவருவது முறையா என்று விமர்சனங்கள் எழுகின்றன.

ஒரு பள்ளிக்கூடமும் மருத்துவமனையும் கட்டுவதற்காக நிதியறிக்கையில் ஒதுக்கிய நிதியை அந்த ஆண்டே பயன்படுத்தினால் நூற்றுக்கணக்கான மாணவர்கள், ஆயிரக்கணக்கான நோயாளிகள் உடனடியாகப் பயன்பெற முடியும். அந்த நிதியை உடனடியாகச் செலவழிக்காமல் அடுத்தடுத்த ஆண்டுகளுக்குத் தள்ளிப்போடுவதை எப்படி சேமிப்புக் கணக்கில் சேர்க்க முடியும்? நாளுக்கு நாள் பணவீக்கம் உயர்ந்துவரும் காலம் இது. திட்டங்களைத் தள்ளிப்போடுவது வருங்காலத்தில் திட்டச் செலவுகளை மேலும் அதிகரிக்கத்தானே செய்யும்? சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடியாகப் பெருமைகொள்ளும் தமிழக அரசு, தன் நிர்வாகத் திறனின்மையை உடனடியாகச் சரிசெய்துகொள்ள வேண்டிய நேரமிது.

**- S. சரவணன்**



# சிந்தனை முத்துக்கள்

**நீதான்**
**பிரபஞ்சமே என்பதால்**
**உன்னைவிடப் பெரியது**
**என்று எதுவுமே**
**இல்லை.**
**நீதான் வாழ்க்கை.**
**உன்னைவிடப்**
**பெரியது எதுவும்**
**இல்லை.**




இரண்டாயிரம் ரூபாய்
கையில் இருந்தால் எத
வாங்கலாம்ன்னு தோனும்

அதே நோட்டு கிழிஞ்
சிருந்தால் இத எவன்
வாங்குவான்னு தோனும்

இதுதான் வாழ்க்கை




**மனம் என்பது வயிறு**
**போன்றது.**
**அதற்குள் எவ்வளவு**
**திணிக்கிறோம் என்பது**
**முக்கியமல்ல,**
**எவ்வளவு**
**சீரணமாகிறது என்பதே**
**முக்கியம்.**







**தவறு செய்வது மனித இயல்பு**

பொது மொழி

நாம் ஒரு தவறை செய்யும்போது
அதை நியாயப்படுத்தக்கூடாது
அதை மறுக்கக் கூடாது
பிறரைக் குற்றம் சாட்டக் கூடாது.
அதை மீண்டும் செய்யக் கூடாது.

பிறகு என்னதான் செய்ய வேண்டும்.?
ஒப்புக் கொள்ளுங்கள்
மன்னிப்புக் கோருங்கள்
கற்றுக் கொள்ளுங்கள்.

இல்லாதவன் தானே என்ன செய்வான் என நினைக்காதீர்கள்.
இல்லாதவனுக்கு இழப்பதற்கு ஏதுமில்லை - எதுவும் செய்வான்.




ஆளுக்கொரு வேசம்,
நேரத்திற்கொரு பேச்சு,
என்றிருப்பவர்கள்தான்
வாழ்க்கையை மிக எளிதாக
எதிர்கொள்கிறார்கள்.


















அரசு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஆவின் பால் கொள்முதல் விலையை ரூ.4 முதல் ரூ.6 வரையிலும், விற்பனை விலையை ரூ.6 வரை உயர்த்தி ஆகஸ்ட் 19 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள ஆணை, தற்போது பலராலும் விவாதிக்கப்பட்டுவருகிறது. பால் உற்பத்தியாளர்கள் பெரும்பாலும் ஏழை களாக இருப்பதாலும், பால் உற்பத்திக்கு ஆகும் செலவு தொடர்ந்து அதிகரித்துவருவதைக் கருத்தில் கொண்டும், பால் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. மொத்த பால் விற்பனையில் அங்கம் வகிக்கும் தனியார் நிறுவனங்கள் பால் விலையை உயர்த்திய போதெல்லாம் அதைப் பற்றிப் பேசாமல் கடந்துபோனவர்கள், இப்போது மட்டும் குரல்கொடுப்பது விசித்திரமாக உள்ளது. தமிழக ஏழை விவசாயி களுக்கு வருமான உயர்வு ஏற்படுவதை இவர்கள் விரும்பவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

முதலில், பால் விலை உயர்வை எதிர்ப்பவர்கள், இந்த விலை உயர்வு இந்தியாவில் ஒன்றும் புதிதல்ல என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நமது நாட்டின் மிகப் பெரிய பால் கூட்டுறவு சங்கங்களான அமுல் மற்றும் மதர் டெய்ரி போன்றவை, பால் உற்பத்திக்கு ஆகும் செலவு தொடர்ந்து அதிகரித்துவருவதைக் கருத்தில் கொண்டு, இந்த 2019 ஆண்டு மே மாதம் பால் பொருட்களின் விலையை உயர்த்தியதன் தொடர்ச்சியாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற பல்வேறு தனியார் பால் நிறுவனங்கள், பால் விலையை 2019-ல் உயர்த்தியுள்ளன. அப்போது ஏன் யாரும் எதிர்க்கவில்லை? மொத்தமாக நாள் ஒன்றுக்கு, ஏறக்குறைய 150 லட்சம் லிட்டர் பால் விற்பனையாகும் தமிழகத்தில், ஆவின் மூலமாக 25 லட்சம் லிட்டர் பால் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 84% பால் தனியார் நிறுவனங்களால் விற்பனை செய்யப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் மூலமாக அவ்வப்போது உயர்த்தப்படும் பால் விலையைவிட, ஆவின் மூலமாக உயர்த்தப்படும் பாலின் விலை எப்படி ஏழைகளைப் பாதிக்க முடியும்?

பால் அனைவருக்கும் அத்தியாவசியமான பொருள் என்றபோதிலும், இதன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயிகளுக்கு இதன் மூலம் கிடைக்கும் வருமானம், அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கு முக்கியமானது என்பதை நாம் உணர வேண்டும். ஆவின் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக ஏறக்குறைய 23 லட்சம் விவசாயிகள் தமிழகத்தில் உள்ளனர். பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர் நிலமற்ற ஏழைகள், சிறு மற்றும் குறு விவசாயிகள். இவர்கள் வறுமைக்கோட்டின் விளிம்பிலேயே பல காலமாக வாழ்ந்துவருகிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய ஏழு கோடி விவசாயக்

# தனியாரும் அரசும் போட்டாப் போட்டி



குடும்பங்கள் பால் உற்பத்தியில் நேரடியாக ஈடுபட்டிருக்கின்றன. இவற்றில் 75% நிலமற்ற சிறு விவசாயிகள். இந்த ஏழைக் குடும்பங்களால் உற்பத்திசெய்யப்படும் பாலுக்குத் தகுதியான விலை கொடுப்பது அவசியமல்லவா?

கறவை மாடுகள் வளர்ப்பவர்கள் தற்போது பல்வேறு சிரமங்களைச் சந்தித்துவருகிறார்கள். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மேய்ச்சல் தரைகள் குறைந்துவருகின்றன. குளம், ஏரிகள் பராமரிக்கப்படுவதில்லை என்பதால், கறவை மாடுகளுக்குத் தேவையான பசும்புல்லும் தண்ணீரும் எளிதில் கிடைப்பதில்லை. பல்வேறு காரணங்களால் கறவை மாடுகளின் விலையில் கடும் ஏற்றம் சமீப காலங்களில் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமில்லாமல், பால் உற்பத்திக்குத் தேவைப்படும், பசும்புல், புண்ணாக்கு, தவிடு, வைக்கோல் மற்றும் இதர செலவுகள் கணிசமாக உயர்ந்துள்ளன. மத்திய அரசின் கீழ் இயங்கும் 'விவசாயப் பொருட்களின் விலை ஆணையம்' தெரிவித்துள்ள புள்ளிவிவரப்படி, உலர் தீவனத்தின் விலை 2012 முதல் 2018-க்கு இடைப்பட்ட காலத்தில், ஏறக்குறைய 50% உயர்ந்துள்ளதாகக் கூறுகிறது. இதைக் காரணம் காட்டி, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம், பால் விலையை உயர்த்தித் தருமாறு பல்வேறு கட்டங்களில் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது. அதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது பாலின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன வசதி இல்லாத, வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கும் பெரும்பாலான இந்திய கிராமங்களில் விவசாயிகளின் வாழ்வாதாரம் கறவை மாடுகள்தான். விவசாயத்தில் ஏற்படும் இக்கட்டான சூழல்களில் பெரும்பாலான குறு மற்றும் சிறு விவசாயிகளைப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து காப்பாற்றி, அவர்களை வாழவைப்பது கறவை மாடுகளின் மூலமாகக் கிடைக்கும் வருமானம் என்று உலக வங்கியால் 1999-ல் இந்தியாவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை கூறியுள்ளது. பால் பொருட்களைப் பல ஆண்டுகளாக இறக்குமதி செய்துகொண்டிருந்த நாம், தற்போது உலகின் அதிகமான பால் உற்பத்திசெய்யும் நாடாக மாற்றியமைத்தது இந்த ஏழை விவசாயிகள்தான். இன்று உலகின் தரம்வாய்ந்த பால் பொருட்களை உற்பத்திசெய்யும் குஜராத் மாநிலத்திலுள்ள அமுல்-ஆனந்த் கூட்டுறவு சங்கங்களை வளரச் செய்து, வெண்மைப் புரட்சி நம் நாட்டில் ஏற்படுத்துவதற்கு உதவியது இந்த ஏழை விவசாயிகள்தான். அமுல் நிறுவனம் பாலுக்குக் கட்டுப்படியான விலை கொடுத்து, வறுமையின் பிடியில் பல ஆண்டுகளாகச் சிக்கித் தவித்துவந்த ஏராளமான விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்கு உயர்த்தியுள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.



விவசாயத்தில் வருமானம் வேகமாகக் குறைந்துவரும் இக்காலகட்டத்தில், உரிய அளவுக்குப் பால் விலையை உயர்த்தாவிட்டால், கறவை மாடுகளை நம்பி வாழும் குடும்பங்கள் பொருளாதாரச் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். பால் விலை உயர்வு ஏழைகளைப் பாதிக்கும் என்று இன்று கோஷமிடுபவர்கள், பெரும்பாலான பால் உற்பத்தியாளர்களும் ஏழைகள்தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் பிணைக் கைதிகள்போல் உழைக்கிறார்கள், இவர்களால் ஒருநாள் பொழுதைக்கூட வேறு இடத்தில் செலவிட முடியாது. இது மட்டுமல்லாமல், பால் உற்பத்திச் செலவும் பல காரணங்களால் சமீப காலங்களில் பன்மடங்கு உயர்ந்துள்ளது. பால் உற்பத்திக்கு முறையான விலை கொடுக்காவிட்டால், நாட்டில் வறுமை பெருகிவிடும். அரசு நிறுவனங்களால் உற்பத்திசெய்யப்படும் பால் அளவு குறைந்தால், தனியார் நிறுவனங்கள் பால் விலையை மேலும் உயர்த்திவிடுவார்கள்.

**- A D. ராஜேந்திரன்**

# புதிய வினாத்தாள் மாதிரிக்குத் தயாராவோம்!

புதிய பாடத்திட்டத்தின்படி வடிவமைக்கப் பட்டிருக்கும் புத்தகங்களுடன் புதிய வினாத் தாள் மாதிரியும் சேர்ந்துகொள்ள, நடப்பாண்டு பத்தாம் வகுப்பு மாணவர்கள் இரட்டைச் சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு அவசியமான வழிகாட்டுதல்களை ஆசிரிய வல்லுநர்கள் உதவியுடன் பார்ப்போம். தற்போது பத்தாம் வகுப்பில் சேர்ந்துள்ள மாணவர்கள் தங்களது ஆறு முதல் ஒன்பதாம் வகுப்புவரை முப்பருவ அடிப்படையிலே தேர்வு களை எழுதிப் பழகியிருப் பார்கள். தற்போது முழுமையான ஆண்டு இறுதி தேர்வாக, அரசுப் பொதுத் தேர்வுக்கு அவர்கள் தயாராக வேண்டும்.




புதிய வினாத்தாள் மாதிரி என்பது 'புளூ பிரிண்ட்' அடிப்படையில் அமைந்திருக்காது என்பதால், சராசரி, மெல்லக் கற்கும் மாணவர் களுக்குச் சற்றுக் கடினமாகத் தென்படலாம். ஆனால், மனப்பாடத்துக்கு முக்கியத்துவம் தராது புரிந்துகொண்டு சுயமாக எழுதுவதற்கான வாய்ப்பு, படைப்பாற்றல் ஊக்குவிப்பு, போட்டித் தேர்வுகளுக்கு அடிப்படையான திறன்களை வளர்ப்பது என வரவேற்புக்குரிய பல அம்சங்கள் புதிய மாற்றங்களில் அடங்கியுள்ளன. அவற்றை மனத்தில் வைத்துப் புதிய மாற்றங்களை உத்வேகத்துடன் எதிர்கொள்வோம். தினசரி வகுப்பில் நடத்தப்படும் பாடங்களைக் கூர்ந்து கவனிப்பது, அன்றைய பாடங்களைக் கூடுமானவரை அப்போதே படித்து முடிப்பது, ஐயங்களை உடனுக்குடன் போக்கிக்கொள்வது, வார இறுதியில் முறையான திருப்புதல்களை மேற்கொள்வது, வகுப்பு, பருவத் தேர்வுகளை வாய்ப்பாகக் கருதி அவற்றுக்குத் தயாராவது போன்ற முன்னேற்பாடுகள் முறையான பாடத் தயாரிப்புக்குக் கைகொடுக்கும்.

பாடங்களின் இறுதியிலுள்ள வினாக்கள், பயிற்சிகளை மட்டுமே நம்பியிருக்காமல் பாடங்களின் உள்ளேயிருந்தும் படிப்பது அவசியம். அந்த வகையில் புதிய வினாத்தாள் மாதிரியின் அடிப்படையில், பத்தாம் வகுப்புக்கான கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களைப் பார்க்கலாம். கணிதம், சமூக அறிவியல் ஆகியவை 100 மதிப்பெண்களுக் கானவை. வினாத்தாளில் 4 பகுதிகளில் வினாக்கள் பிரித்துக் கேட்கப்படுகின்றன.

முதல் பகுதியானது தேர்ந் தெடுத்து எழுதும் வகையிலான 14 ஒரு மதிப்பெண் வினாக்களுடன் அமைந்துள்ளது. இரண்டாம் பகுதியில் கொடுக்கப்பட்ட 14-லிருந்து 10 வினாக்களுக்குப் பதிலளிப்பதாகவும், அவற்றில் ஒன்று கட்டாய வினா வாகவும் (வி.எண்: 28) இருக்கிறது. 5 மதிப்பெண்களுக்கான மூன்றாவது பகுதியில் கொடுக்கப் பட்ட 14-லிருந்து 10 வினாக்களுக்கு விடையளிப்பதாகவும் அவற்றில் ஒன்று (வி.எண்: 42) கட்டாய வினாவாகவும் அமைந்துள்ளது. இறுதியாக 8 மதிப்பெண்களுக் கான நான்காவது பகுதியில் 'அல்லது' வகையிலான 2 வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன. அறிவியலில் செய்முறைத் தேர்வுக்கு 25 மதிப்பெண் ஒதுக்கப்பட்டுள்ளதால், கருத்தியல் (தியரி) தேர்வு 75 மதிப்பெண்களுடன் அமைந்திக்கும்.

அதற்கேற்ப முதல் பகுதியில் 12 ஒரு மதிப்பெண் வினாக்களும், இரண்டாம் பகுதியானது ஒரு கட்டாய வினா (வி.எண்: 22)


TN SSLC Model Paper

Tamil Nadu 10th Sample Questions Papers

உட்படக் கொடுக்கப்பட்ட 10 வினாக்களில் இருந்து 7-க்கு விடையளிப்பதாகவும் அமைந்திருக்கும். 4 மதிப்பெண் களுக்கான மூன்றாவது பகுதி கொடுக்கப்பட்ட 10 வினாக்களில் 7-க்கு பதிலளிப்பதாகவும், அவற்றில் ஒன்று கட்டாய வினாவாகவும் (வி.எண்: 32) அமைந்திருக்கும். இறுதியாக நான்காவது பகுதி தலா 7 மதிப்பெண்களுடனான 3 வினாக்களுடன் கேட்கப்பட்டிருக்கும்.

எடுத்துக்காட்டுக் கணக்குகள், பயிற்சிக் கணக்குகள் மட்டுமன்றி வரையறை, முன்னேற்றச் சோதனை, சிந்தனைக் களம் ஆகிய பகுதிகளிலும் கவனம் செலுத்த வேண்டும். இப்பகுதிகளில் இருந்து 1, 2 மதிப்பெண் வினாக்களைக் கணிசமாக எதிர்பார்க்கலாம். கணிதக் கருத்துகளைப் புரிந்துகொள்வதும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளை விளங்கிக்கொள்வதும் அவசியம்.

பாட வினாக்களைச் சற்றே மாற்றியும், சுயமாகப் புதிய வினாக்களை உருவாக்கியும் அவற்றைத் தீர்த்துப் பழகுவதுடன், ஐயங்களை ஆசிரியரிடம் கேட்டுத் தீர்வு பெறுவதும் நல்லது. புதிய பாடப்புத்தகத்துடன் கடந்த ஆண்டு கணித நூல், தற்போதைய சி.பி.எஸ்.இ. புத்தகம் ஆகியவற்றின் பாடக்கருத்துகளை ஒப்பிட்டுப் பார்ப்பது, தயாரிக்கப்பட்ட வினாக் களை எதிர்கொள்ள உதவும். 'தீட்சா' செயலியில் உள்ள வினாக்களையும் திருப்புதல் செய்யலாம்.

புதிய மாதிரி வினாத்தாளில் ஒரு மதிப்பெண்களுக்கு முன்னுரிமை தந்து படிக்க வேண்டும். வரிக்கு வரி வாசிப்பது, ஆண்டுகளைக் காலக்கோடு மூலம் நினைவுகொள்வது, முக்கியப் பெயர்கள், போர்கள், இடங்கள் ஆகியவற்றை ஒன்றோடொன்று தொடர்புபடுத்திப் படிப்பது அவசியம். இந்த வகையிலான ஒரு மதிப்பெண் களுக்கான தயாரிப்பு, இதர பகுதி வினாக்களுக்குச் சிறப்பாகப் பதில் அளிக்கவும் உதவும்.

5 மதிப்பெண்களுக்கான பகுதி 3-ல் ஒரு வினா கோடிட்ட இடத்தை நிரப்பும் வகையிலும், மற்றொரு வினா பொருத்துக வகையாகவும் அமைந்துள்ளன. மேலும் ஒரு வினா காலக்கோடு குறித்தும் கேட்கப்படுகிறது. ஒரு மதிப்பெண்களுக்கான முழுமையான தயாரிப்பு, இந்த வினாக்களுக்குப் பதிலளிக்கவும் உதவும். இதே பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டாய வினா வரலாற்று வரைபடமாகவும் (மேப்), நான்காவது பகுதி வினாக்களில் ஒன்று புவியியல் வரைபடமாகவும் உள்ளது. இவற்றில் சாய்ஸ் எதுவும் கிடையாது என்பதால் இப்போதிருந்தே கவனமாகத் தயாராவது அவசியம்.

அறிவியலின் 23 பாடங்களிலும் 'கற்றல் நோக்கங்கள்' என்ற தலைப்பில் கொடுக்கப் பட்டவற்றை மாணவர்கள் அவசியம் படித்துவிட வேண்டும். பாடக்கருத்துகளில் இருந்து கேள்வி களை உருவாக்கப் பழக வேண்டும். 9-ம் வகுப்புவரை பழகிவந்த மனவரைபடத்தை, பாடக்கருத்துகளை உள்வாங்கவும் நினைவில் நிறுத்தவும் பயன்படுத்தலாம். மேலும் பாடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள கருத்து வரைபடத்தையும் இந்தப் பயிற்சிக்குப் பயன்படுத்தலாம்.

'க்யூ.ஆர். கோட்' மூலம் காட்சி அடிப்படையிலான விளக்கங்களைப் பெறுவதும், இணையத்தின் உதவியுடன் பாடத்தலைப்பு தொடர்பாகக் கூடுதலாக அறிந்துகொள்வதும் புரிதலை அதிகரிக்கும். வரையறை, விதிகள், சூத்திரம், சமன்பாடு, மாறிலிகள், அலகுகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு மனப்பாடம் செய்ய வேண்டும். செய்முறைத் தேர்வையும் கருத்தியல் தேர்வையும் தொடர்புபடுத்திப் படிப்பதும், பயிற்சி மேற்கொள்வதும் இரு தேர்வுகளுக்கும் ஒருசேரத் தயாராக உதவும்.

**- B. நாராயணன்**

# விருதுகளை குவிக்கும் தொடக்கப்பள்ளி

கரூர் மாவட்டம் க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ரா.செல்வக்கண்ணன்(54) தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு பெற்றுள்ளார். இவர், கடந்த 2016-ம் ஆண்டு மாநில நல்லாசிரியர் விருதான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்றவர். இந்த ஆண்டு தமிழகத்தி லிருந்து தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகியுள்ள இருவரில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

என்ற சிறப்பும், ரூ.25,000 சிறப்பு நிதியும் வழங்கப்பட்டது.




கடந்த 1995-ம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்ந்த ரா.செல்வக்கண்ணன், கடந்த 2002-ம் ஆண்டு தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். கடந்த 2005-ம் ஆண்டு க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார். இவர் பொறுப்பேற்ற பிறகு, செயல்வழிக் கற்றல் முறையை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்காக செயல்வழிக்கற்றல் மாதிரிப் பள்ளி

அனைவருக்கும் கல்வி இயக்ககம் மூலமாக இப்பள்ளிக்கு கடந்த 2006-ம் ஆண்டு 2 கணினிகள் வழங்கப்பட்டன. கொடையாளர்கள் மூலம் மேலும் 7 கணினிகள் பெறப்பட்டு, 9 கணினிகள் கொண்ட கணினி ஆய்வகம் பள்ளியில் அமைக்கப்பட்டு அனைத்து கணினிகளும் இணையதள வசதியுடன் செயல்படுத்தப்பட்டன. 2006-ம்

ஆண்டில் அரசுத் தொடக்கப் பள்ளிகளில் முதன்முதலாக கணினி ஆய்வகம் அமைக்கப்பட்ட பள்ளி இதுதான்.

இதைத்தொடர்ந்து, சிறப்பான செயல்பாட்டுக்காக 2008-ம் ஆண்டு மாவட்ட அளவில் சிறந்த கணினி வழிக் கற்றல் மையத்துக்கான விருது வழங்கப்பட்டது. ரா.செல்வக்கண்ணனின் சீரிய முயற்சியால் பள்ளிக்குள் நுழையும்போதே இதமான மனநிலையை உருவாக்கும் விதமான மரங்கள், செடிகள் என பசுமையான வளாகமாக பள்ளி வளாகம் மாற்றப்பட்டது. ஸ்மார்ட் வகுப்பறை, டிஜிட்டல் மல்டி மீடியா வகுப்பறை, அபாகஸ், டேப்லட் வாயிலாக கல்விசார் செயலிகள் பதிவிறக்கம் செய்யப்பட்டு மாணவர்களுக்கு கற்பித்தல், வண்ணப்படங்கள் வரையப்பட்ட வகுப்பறைகள் என தனியார் பள்ளிகளை விஞ்சும் விதமாக இப்பள்ளி மாறியது.

அனைத்து வகுப்பறைக்கும் டைல்ஸ் பதிக்கப்பட்டு மின்விசிறி, தனித்தனி தொலைக்காட்சிப் பெட்டி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, நன்கு பராமரிக்கப்படும் கழிப்பறைகள், கைகழுவ பீங்கான் என அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. சிறப்பு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு ஸ்போக்கன் இங்கிலீஷ், ஹிந்தி, இசை (கீ போர்டு, வாய்ப்பாட்டு), நடனம் (மேற்கத்திய மற்றும் கிராமியம்), கராத்தே, யோகா, ஓவியம், கேரம், செஸ், பாரம்பரிய விளையாட்டுகள் அனைத்தும் இங்கு கற்றுத்தரப்படுகின்றன. ஒவ்வொருவரின் தனித்திறனை அடையாளம் கண்டு ஊக்குவிக்கப்பட்டு மாவட்ட, மாநில, அகில இந்திய அளவிலானபோட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று பதக்கங்களை வென்று வருகின்றனர்.



கடந்த 1940-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளி 2015-ம் ஆண்டு பவள விழாவை கொண்டாடியது. 2015-ம் ஆண்டுக்கான ஐஎஸ்ஓ 9001 சர்வதேச தரச்சான்றிதழையும் பெற்றது.மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமை பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் நடத்தப்படுகிறது. 2014-ம் ஆண்டு முதல் கல்விச் சீர் வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளியைப் பற்றி தலைமை ஆசிரியர் ரா.செல்வக்கண்ணன் கூறியபோது, கரூர் மாவட்டத்தில் ஒற்றை இலக்க மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகளில் அதிக அளவாக இப்பள்ளியில் தான் 220 மாணவர்கள் பயின்று வருகின்றனர். 2005-ல் 104 ஆக இருந்த மாணவர் எண்ணிக்கையை 220 என உயர்த்தியுள்ளதில் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய விருதுகளை எனது உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதுகிறேன்" என்றார்.

**- தாயுமானவன்**



**முனைவர் ஆ.மவுரியன்**



**வீர தமிழச்சிகளின் வரலாறு..!**

**(22)**

## பாரதத்தாயின் மூத்த மகள் வீரத்தியாகி

# சொர்ணத்தம்மாள்

**சுதந்திர போராட்டத்தில் அடி, உதை, சிறை, சித்ரவதை, அவமானத்தையும் அனுபவித்தவர்**

**மதுரை கீழ்பாலத்தில் இறங்கி வைகை ஆற்றில் குளித்துவிட்டு புதிய சேலையைக் கட்டிக்கொண்டோம். அங்கிருந்து குதிரை வண்டியில் மதுரை புதுமண்டபத்திற்கு கூட்டிச் சென்றார்கள்.**

அங்கு போட்டோகடை வைத்திருந்த ராமலிங்கம் என்பவர் எங்களுக்கு சாப்பாடு வாங்கிக்கொடுத்தார். அவரும் சுதந்திரப் போராட்ட தியாகி. பிறகு நடந்தது குறித்து அவரும் மற்றவர்களும் விசாரித்தனர். போலீஸார் எங்களைத் துன்புறுத்தியதையும் வயல்காட்டிற்கு கொண்டு போய் விட்டதையும் சொன்னோம். அவர்களுக்கு அளவிடமுடியாத வருத்தம். "நீங்க அடிபட்டு, அவமானப்பட்டு, கஷ்டப்பட்டது பெரிய தியாகம்.." என்றார்கள். பிறகு எங்களுக்கு கதர் சேலை வாங்கித் தந்து வீட்டிற்கு குதிரை வண்டியில் அனுப்பி வைத்தார்கள்.

போலீசார் இப்படி என்னை அவமானப்படுத்திய பிறகு காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொள்வது இன்னும் அதிகரித்தது. மேடையில் காந்தி பாட்டு பாடுவேன். ஒரு முறை மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் காந்திஜி பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் பெண்கள் பகுதியை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தேன். திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அப்போது ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த தொண்டர்களை மேடைக்கு வருமாறு காந்திஜி சொன்னார். நான் மேடைக்குப் போய் காந்திஜி காலைத் தொட்டு கும்பிட்டேன். காந்திஜி பதறிப்போய் "என்னை ஏன் தொட்டுக் கும்பிடுகிறீர்கள். நான் என்ன பாவம் செய்தேன்?" எனக் கேட்டார் என்று பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார் சொர்ணத்தம்மாள்.

சொர்ணத்தம்மாளை அரைகுறை ஆடை உடுத்த வைத்த போலீஸ்துறை அதிகாரிகள் மீது காங்கிரசாருக்கு சொல்லமுடியாத கோபம் இருந்தது. அதிலும் குறிப்பாக இளைஞர்கள் ஆத்திரத்தில் இருந்தனர். இந்தக் கொடுமையைச் செய்தவன் விஸ்வநாதன் நாயர் என்ற ஒரு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். இவரைத் தீச்சட்டி கோவிந்தன் என்று குறிப்பிடுவார்கள். தேசபக்தர்களுக்கு கொடுமையான தண்டனை வழங்குவதில் "கெட்டிக்காரர்".

மதுரை இளைஞர்களுக்கு இந்த விஸ்வநாதன் நாயர் மீது ஒரு கண். அவனை பழி தீர்த்துக் கொள்வதற்காக நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படியொரு சந்தர்ப்பமும் அவர்களுக்கு வாய்த்தது. இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் நாயர்

மீது ஆசிட் வீசிவிட்டு "பழிக்குப் பழி. எங்கள் தாய்க்குலத்தை நிர்வாணமாக்கி அவமதித்த விஸ்வநாத நாயரே, இனி வாழ்நாள் முழுவதும் நீ செய்த அந்த கொடுமையை உன் முகத்தையும் உடம்பையும் பார்த்துப் பார்த்து நினைவு படுத்திக் கொள்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டனர்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் நாயர் மீது ஆசிட் வீசிய நபர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் எல்லாம் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். ஆனால், வழக்கை நிரூபிக்கப் போதிய சாட்சிகள் கிடைக்கவில்லை. எனவே ஆசிட் வீசினார்கள் என்பதற்குப் பதிலாக அரசாங் கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக இந்திய பாதுகாப்புச் சட்டப்படி வழக்குத் தொடுத் தார்கள். இந்த வழக்கு மதுரை செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

குற்றவாளிகள் சார்பில் வழக்கறிஞர்கள் ராமானுஜம் ஐயங்கார், கோ.குப்புசாமி, டி.தர்மராஜ் சந்தோஷம் போன்ற வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள். இறுதியில் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. ராஜகோபால், ராமகிருஷ்ணன், ஆகிய இருவரும் 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை



பெற்றனர். இதில் குற்றம் சாட்டப்பட்டிருந்த நீலகண்டன் என்பவருக்கு ஐந்தாண்டு கடுங்காவல் தண்டனையும், லட்சுமணன், காயாம்பு தேவர், கோமதிநாயகம் ஆகியோருக்கு தலா மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன.



குற்றம்சாட்டப்பட்ட ஓ.ஆர்.சுந்தர ராவ், டி.எம்.கோபாலாச்சாரி, ஏ.என். விசுவநாதன், ரத்தினம் பிள்ளை, சோமுப் பிள்ளை, கணபதி பிள்ளை, சங்கிலித்தேவர், நாராயணன், குருநாதன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர். இருந்தாலும் இவர்களில் பலர் மறுபடியும் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு நீண்ட காலம் சிறையில் அடைக்கப்பட்டனர். தண்டனை பெற்றவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிவிஷன் மனு செய்தனர். ஜெயராமன் என்ற வழக்கறிஞர் எதிரிகளுக்காக வாதிட்டார். ஆனால் உயர்நீதி மன்றம், செஷன்ஸ் நீதிமன்றத்தின் தீர்ப்பையே உறுதி செய்தது.

சுதந்திரவேள்வியில் அடிபட, ரத்தம் சிந்த, உயிர்விடக் கூட தயார். ஆனால் பெண்மைக்கு இழிவு ஏற்பட விட மாட்டோம் எனக் கூறி மதுரையின் அடையாளத்தை உறுதி செய்து தண்டனையை அனுபவித்தார்கள். "பஸ் பாஸ், ரயில் பாஸ், பென்சன் கிடைக்கும் என்று நாங்கள் போராடவில்லை. சுதந்திரத்திற்காகத்தான் போராடினோம், சிறை சென்றோம். சுதந்திரம் கிடைத்தபோது "கஷ்டப்பட்டது வீண் போகவில்லை." என சந்தோஷப்பட்டேன். இதையெல்லாம் நல்ல முறையில் காப்பாற்ற வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக, சாதி மதம் பாராமல் இணைந்து இருந்து சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டும். என்று பாரதத்தாயின் மூத்த மகள் வீரத்தியாகி சொர்ணத்தாயம்மாள் ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

நன்றி

மீண்டும் அடுத்த இதழில் மற்றொரு வீர தமிழச்சியின் வறலாற்றை பார்ப்போம்.

**- தொடரும்**

# கொலைகாரனைப் போலப் பின்தொடரும் செயலிகள்




நமது அந்தரங்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இன்ஸ்டாகிராம், ட்விட்டர் போன்றவற்றின் வழியாக நம்மை எல்லோரிடமும் காட்டிக்கொள்வதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறோம். ஒரே மாதிரியான விளம்பரங்கள் நம்மைப் பின்தொடர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு அரண்டு போகிறோம். நமது தனிப்பட்ட விஷயங்களின் தரவுகள் சுரண்டடப்படுவதை நாம் வெறுக்கிறோம்; ஆயினும், நம் தகவல்களைச் சுரண்டாத 'டக்டக்கோ' (DuckDuckGo) தேடுபொறியைவிட கூகுளையே நாடுகிறோம்; ஒரு கொலைகாரனைப் போல கூகுள் நம்மைப் பின்தொடர்வதை நாம் பொருட்படுத்துவதேயில்லை. ஃபேஸ்புக்கையும் அப்படியே பயன்படுத்துகிறோம்; நம் உள்ளூறுப்புகளை உருவியெடுப்பதுபோல் நம் தகவல்களை அது எடுத்துக்கொண்டிருப்பதையும் நாம் பொருட்படுத்துவதேயில்லை.

நமது செயலிகளைத் தரவிறக்கும்போது 'ஒப்புக் கொள்கிறேன்' என்பதையே சொடுக்குகிறோம். இத்தனைக்கும் அந்தச் செயலிகளெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருப்பவை; நாம் எவ்வளவு சாப்பிடுகிறோம், என்ன மாதிரியான இசை கேட்கிறோம், நமக்குக் கருமுட்டை எப்போது வெளிப்படும் என்ற தகவல்களைத் தங்களுக்குள் பரிமாறிக்கொள்பவை என்பதை நன்கு அறிந்தே அந்தச் செயலிகளை நாம் தரவிறக்குகிறோம்.

கலிஃபோர்னியாவைச் சேர்ந்த ஜாய்ஸ் சியல்ஸ் என்ற தனியுரிமைச் செயல்பாட்டாளர் ஒரு விளக்கம் கூறுகிறார். இணையத்தில் இருக்கும்போது நாம் யாராக, என்னவாக இருக்கிறோம் என்பதை இன்னும் புரிந்துகொள்ள ஆரம்பிக்கவே இல்லை என்கிறார் அவர். இதற்குக் காரணம், இணைய அனுபவம் என்பது உடலற்ற ஒரு அனுபவமாக இருப்பதுதான். இணையவெளியின் மூடுபனியூடே வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்போது, நாம் தனியர்களாக இருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் அப்படி அல்ல. நாம் கண்காணிக்கப்படுகிறோம், பின்தொடரப் படுகிறோம்; நம்மால் அதைக் காணவோ உணரவோ முடியவில்லை என்பதால் அது நமக்குத் தெரிவதில்லை.

இதுதான் நாம் மனசாட்சியைக் கொஞ்சம் அடக்கிவைத்துவிட்டு இணையத்தில் திரிவதற்கும் காரணம். ஏனெனில், நாம் கண்காணிக்கப்படுவதற்கும் பின்தொடரப்படுவதற்குமாக

அவமானத்துக்குள்ளாகும் வகையிலான விலையைப் பெரும்பாலானோர் கொடுப்ப தில்லை. "நிர்வாணமாக நடந்துபோய்க் கொண்டிருந்தாலும் அதனால் நாம் உணரக் கூடிய விளைவுகள் ஏதும் ஏற்படாததன் பெரும் அனுபவம் நமக்குக் கிடைத்துக்கொண்டி ருக்கிறது" என்கிறார் சியல்ஸ். அப்படி இருக்கும்போது ஆடை அணிவதைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

ஆகவே, நம் போக்கில் போய்க்கொண்டி ருக்கிறோம். இதற்கிடையே ஒவ்வொருவரும் நம் தேடல்கள், விருப்பங்கள், விநோத ஆசைகள், பதற்றங்கள் குறித்துத் தரவுகளைத் திரட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். கூகுள், அமேசான், ஃபேஸ்புக், யூட்யூப், பேண்டோரா, பின்ட்ரெஸ்ட், தி வெதர் சேனல், ரெடிட், விக்கிபீடியா, போர்ன்ஹப், நாம் படிக்கும் இணைய செய்தித்தாள், நம் வங்கி, நம் செல்போன் சேவையளிப்பவர்கள் என்று எல்லோருமே திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். "நாமெல்லாம் அடிப்படையில் சமூக மனிதர்கள், தனிப்பட்ட முயற்சியின் மூலம்தான் தனிமனிதர்கள் ஆகிறோம்" என்று தரவு நிறுவனம் ஒன்றின் நிறுவனரான டானா பாய்ட் எழுதியது ரொம்பவும் பொருத்தமானது.



"நமது தரவுகளைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் நாம் வெற்றி பெற முடியாது என்ற உணர்வே நிலவுகிறது" என்கிறார் கார்னெஜீ மெலான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அக்விஸ்ட்டி. "அதற்கான சாதனங்கள் மிகவும் நேர விரயம் ஆக்குபவை. அவற்றால் எந்தப் பலனும் இல்லாமலும் போகலாம். ஏனெனில், உங்களுடைய தரவு ஏற்கெனவே இணையவெளியில் இருந்துகொண்டிருக்கிறது."

நம்மால் ஏதும் செய்ய முடியாது என்று நினைப்பதுதான் அந்தரங்கம் தொடர்பான முரண்பாட்டை விளக்குவதாகும். கைவிடப்பட்ட நிலையில் மனிதர்கள் இப்படியொரு முடிவுக்குத்தான் வருவார்கள்.

'கண்காணிப்பு முதலாளித்துவத்தின் யுகம்' என்ற நூலின் ஆசிரியரான ஜுபோஃப் மக்களின் பழக்கவழக்கங்கள் குறித்த தரவுகளைப் பெருநிறுவனங்கள் எப்படியெல்லாம் சுரண்டுகின்றன என்பதையும், சமூகத்தில் இதனால் ஏற்படும் விளைவு கள் பற்றியும் ஆராய்ந்திருக்கிறார். இணையத்தில் நாம் கவனக்குறைவாக இருக்கிறோம் என்று திட்டுவது அபத்தமானது என்கிறார் அவர். ஏனெனில், நமக்கு வேறு வாய்ப்பே கிடையாது. இணையத்தில்தான் நம் தனிப்பட்ட தேவைகள் பூர்த்தியாகின்றன, ஏனெனில், நிதர்சன வாழ்வில் அவை பூர்த்தியாவதில்லை. இணையத்தில் இருக்கும்போது நம்மில் பெரும்பாலானோரும் உணராத விஷயம் என்னவென்றால், நாம் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களெல்லாம் நம் அந்தரங்கம் குறித்த எண்ணங்களை நமக்குத் தெரியாமல் எப்படி மாற்றியமைத்துக்கொண்டிருக்கின்றன என்பதுதான். தொடர்ச்சியாக நமது நடத்தையையும் மாற்றியமைக்கின்றன.

பெரும் தொழில்நுட்பங்களெல்லாம் நமது விருப்பங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை மட்டுமல்ல, அதை உருவாக்கியவர்களின் விருப்பங்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டவை. அவற்றிலெல்லாம் அச்சுறுத்தும் ஒரு தானியங்கித் தன்மை இருக்கிறது. ('நான் ஒப்புக்கொள்கிறேன்', 'கிளிக்'). ஏதோ நாமெல்லாம் எந்திர மனிதர்களைப் போல! இதில் முரண் எது தெரியுமா? இந்தத் தொழில்நுட்பங்களிடம் விழுந்துகிடக்கும் பெருந்திரள் மக்கள்தான் தங்கள் அந்தரங்கம் குறித்து தீர்க்கமான எண்ணம் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.

**- வீ. சிவசங்கரன்**

# புத்தனுக்கும் ஆசை முளைக்கும்

எட்டி பிடிக்கும் தூரத்தில்
வெற்றியோ தோல்வியோ
இல்லை கற்பனையை தவிர

கொஞ்சம் மாற்றம் தோற்றத்தில்
கொஞ்சம் ஏமாற்றம் வாழ்க்கையில்
இவ்வளவுதான் வித்தியாசம்
குழந்தைப் பருவத்திற்கும்
தற்போதைய நிலைக்கும்...!

அறிவுரையினால்
புரிந்து கொள்பவரை விட
அனுபவத்திலிருந்து
தெரிந்து கொள்பவரே
அறிவாலும் மனதாலும்
பலசாலியாகிறான்...!

ஆறுதல் கூட
சொல்லத் தெரியாது
ஆனாலும் நிறைய
கவலைகளை மறக்க
செய்கின்றன குழந்தைகள்...!

வென்றவனுக்கும்
தோற்றவனுக்கும்
வரலாறு உண்டு
வேடிக்கை பார்த்தவனுக்கும்
விமர்சனம் செய்தவனுக்கும்
ஒரு வரி கூட கிடையாது

காலால் மிதித்த
தன்னை கையால்
எடுக்க வைக்கும்
பெருமை கொண்ட
முள்ளை போல
உன்னை தாழ்த்திப் பேசுபவர்கள்
புகழ்ந்து பேசும் வரை
உன் முயற்சியை
வடிவமைத்துக் கொள்

கோபத்தில்
விலகி இருந்தாலும்
தன்னால் நேசிக்கப்பட்ட
உறவின் மனதை
நோகடிக்காமல் நடந்து
கொள்ளும் உறவுகள்
கிடைப்பது
வாழ்வின் வரம்

இருட்டில் இருந்துகொண்டு
விளைவுகளை பற்றி
சிந்திப்பதை விட
வெளிச்சத்தை சந்திக்க
முயற்சிசெய்

மூழ்கி விட்டாய்
என்று மற்றவர்கள்
எண்ணும் போது
முயற்சி கொண்டு
முத்தெடுத்து மேலேறி வாருங்கள்
கடலும் கை கொடுக்கும்

வெற்றியே நிரந்தரமல்ல
எனும் போது
தோல்வி மட்டும்
என்ன விதிவிலக்கா
இ(எ)துவும் கடந்து போகும்

நாம மகிழ்ச்சியா இருந்தா
வாழ்க்கை நல்லா இருக்கும் அதுவே
நம்மால் பிறரை மகிழ்ச்சியா
வைக்க முடிஞ்சா வாழ்க்கை
அர்த்தம் உள்ளதாவும் இருக்கும்
மகிழ்வித்து மகிழ்வோம்

நமது எண்ணங்கள்
மிகவும் வலிமையானது
அவற்றை
பூக்களைப் போல தூவினால்
அது நமக்கு
மாலையாகக் கிடைக்கும்
கற்களைப் போல எரிந்தால்
அது நமக்கு
காயங்களாகக் கிடைக்கும்

நம் வாழ்க்கை
நகர்ந்து கொண்டே
இருக்க வேண்டும்
ஒவ்வொருவரிடமும்
ஒரு பாடத்தை
கற்றுக்கொண்டு

- கவிஞர் நிவேதிதா



# சதுப்பு நிலங்கள் பாதுகாக்கப்படுமா?

சென்னை நகரின் தென்பகுதியில், வங்காள விரிகுடா கடலில் இருந்து சுமார் 20 கி.மீ தொலைவில், 80 சதுர கி.மீ பரப்பளவில் பள்ளிக்கரணை சதுப்புநிலம் உள்ளது. இந்திய அரசால் 1985-86-ல் செயல்படுத்தப்பட்ட தேசிய சதுப்புநில பாதுகாப்பு மற்றும் நிர்வாக திட்டத்தின்கீழ் கண்டறியப்பட்டுள்ள 94 சதுப்புநிலங்களில் இதுவும் ஒன்று. இது, தமிழ்நாட்டில் உள்ள மூன்றாவது சதுப்பு நிலம். முதலாவது சதுப்புநிலம் கோடியக்கரை வனஉயிரின உய்விடத்திலும், இரண்டாவது சதுப்புநிலம் விழுப்புரம் மாவட்டம் கழுவேலி பகுதியிலும் உள்ளது. சதுப்பு நிலங்களை பாதுகாக்க, ஒவ்வொரு மாநில உயர்நீதிமன்றங்கள் தாமாக முன்வந்து வழக்கு பதிவுசெய்து, உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து, மூத்த வழக்கறிஞர் பி.எஸ். ராமன் வாயிலாக அறிக்கை பெற்றுள்ளது.

அதில், சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை பல்வேறு தரப்பினர் ஆக்கிரமித்துள்ளனர். கடந்த 1965ம் ஆண்டு 5,500 ஹெக்டேராக இருந்த சதுப்பு நிலம், 2013ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 600 ஹெக்டேராக குறுகியுள்ளது. பள்ளிக்கரணை சதுப்புநிலத்தையொட்டியுள்ளமாநகராட்சியின் இரண்டுகுப்பைகிடங்குகளால்நீராதாரம்மற்றும் தாவரங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுமார் 1,085 குடியிருப்புகள் ஆக்கிரமித்துள்ளன. பறக்கும் ரயில் நிலைய திட்டத்தால் 100 ஏக்கர் சதுப்பு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தேசிய கடல்சார் கல்வி நிறுவனத்தால் 20.25 ஏக்கர் சதுப்பு நிலம், மத்திய காற்றாலைகள் நிறுவனம், மற்றும் பல தனியார் ஐ.டி. நிறுவனங்களும் பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களை ஆக்கிரமித்துள்ளன. இதேபோல, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் உள்ள கழுவேலி சதுப்பு நிலம், 600 சதுர கி.மீ பரப்பில் இருந்து 75 சதுர கி.மீ அளவிற்கு குறுகிவிட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் நீர்நிலை ஆக்கிரமிப்பு தொடர் கதையாகிவிட்டது. தமிழகத்தில் பொதுப்பணி துறை கட்டுப்பாட்டில் 13,699 ஏரிகள் உள்ளன. இவற்றில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகள் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கியுள்ளன. மதுரை ஐகோர்ட் கிளை வரம்பிற்கு உட்பட்ட 13 மாவட்ட நீர்நிலைகளை பராமரிப்பது, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக தமிழக அரசின் தலைமை செயலாளர் தலைமையில் குழு அமைத்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என மதுரை ஐகோர்ட் கிளை கடந்த இரு தினங்களுக்கு முன்பு உத்தரவிட்டுள்ளது. ஆக்கிரமிப்பு தொடராமல் இருக்க, உரிய கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல், இயற்கை வளம் அடியோடு சுரண்டப்பட்டு, நீராதாரம் முடங்கி, சுற்றுச்சூழலுக்கு ஒட்டுமொத்தமாக வேட்டு வைக்கப்பட்டு விடும்.

**- ஆசிரியர்**

நுகர்வோருக்கு அதிகாரமளிக்கும் சட்ட முன்வடிவு மக்களவையில் நிறைவேறியிருக்கிறது. முதல் நுகர்வோர் சட்டம் கொண்டுவரப்பட்ட 1986-க்குப் பிறகு, பொருட்களை விற்பதிலும் சேவைகளை அளிப்பதிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதை மனதில் கொண்டு இணைய வழி விற்பனை, தொலைக்காட்சி வழி விற்பனை, நேரடி விற்பனை, வெவ்வேறு நிலைகளில் விற்பனை, பாரம்பரிய விற்பனை என்று அனைத்தும் இந்தப் புதிய சட்ட முன்வடிவின் விசாரணை வரம்பில் இடம்பெற்றுள்ளன.

வீடுகள் - அடுக்கக வீடுகள் விற்பனை, தொலைத்தொடர்பு சேவைகள் ஆகியவற்றுக்கும் பொருந்தும் வகையில் சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. முறையற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடைசெய்தது முந்தைய சட்டம். இப்போதைய சட்டம் அப்படிப்பட்ட எல்லாவித முறைகேடுகளையும் தடுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் முறையற்ற ஒப்பந்தங்கள் எவை என்ற விளக்கமும் சேர்க்கப் பட்டிருக்கிறது. நல்ல விஷயம்!

ஒரு பொருளால் அல்லது சேவையால் நுகர்வோருக்குத் தீங்கு ஏற்பட்டால் பொருளைத் தயாரித்தவர் அல்லது சேவையை வழங்குபவரைப் பொறுப்பாக்கும் வகையில் இந்த சட்ட முன்வடிவு உள்ளது. உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், சேவை அளிப்பவர்கள் நுகர்வோருக்கு உரிய இழப்பீடு வழங்கியாக வேண்டும்.

இப்போதுள்ள நுகர்வோர் பாதுகாப்புப் பேரவைகள் வெறும் ஆலோசனை அமைப்புகளாக மட்டுமே இருக்கின்றன. சரக்கு - சேவை விற்பனைகளில் குறை இருந்தால், அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரமுள்ள ‘மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்’ ஏற்படுத்தப்பட புதிய சட்டம் வகைசெய்கிறது. தீங்கு விளைவிக்கும் பொருட்களைச் சந்தையிலிருந்து திரும்பப் பெறவும், நுகர்வோர் செலுத்திய பணத்தைத் திருப்பித்தருமாறு உத்தரவிட அதிகாரம் உள்ளதாகவும் இது இருக்கும்.

# உரிமைகளை அடைய நுகர்வோர்க்கு பெரிய சிக்கல்






நுகர்வோர் நீதிமன்றங்களிலும் இப்போது வழக்குகள் தேங்கத் தொடங்கிவிட்டதால் 'மாற்று வழிகளில்' நுகர்வோர் புகார் வழக்குகளை விரைந்து தீர்க்கவும் சட்ட முன்வடிவு வகைசெய்கிறது. இதற்கான 'மத்தியஸ்த அமைப்பு' மாவட்ட, மாநில, தேசிய அளவில் ஏற்படுத்தப்படவுள்ளன. தோனி, மாதுரி தீட்சித் போல, விளம்பரத் தூதர்களாகும் பிரபலங்கள் நுகர்வோர்களுக்குத் தவறான வழிகாட்டுவதைத் தடுக்க சட்ட முன்வடிவு ஆலோசனை கூறுகிறது.

எந்த ஒரு பொருளையும் சேவையையும் உண்மையாகப் பயன்படுத்திய பிறகே விளம்பரத் தூதர்களாக நடிக்க வேண்டும், இல்லாவிட்டால், நுகர்வோர் வழக்கு தொடர்ந்தால் ரூ.10 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரையில் அபராதம் செலுத்துவதுடன் மேற்கொண்டு எந்த விளம்பரப் படத்திலும் ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரையில் தலைகாட்டக் கூடாது என்றும் சட்ட முன்வடிவு அறிவுறுத்துகிறது.

நுகர்வோரின் உரிமைகளை அவர்கள் அடைவதில் பெரிய இடையூறு இந்தியாவில் நிலவுகிறது. இந்நிலை மாற வேண்டும். நுகர்வோர் நீதிமன்றங்களை எளிதில் அணுகவும் எளிதாகப் புகார்களைத் தெரிவித்து வழக்கு தொடரவும் குறிப்பிட்ட காலத்துக்குள் விசாரித்து நீதி வழங்கப்படவும் அரசு உறுதிசெய்தால் முழுப் பலனும் கிடைக்கும்.

**- S. சுப்ரமணியன்**

---

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

ஒரு பக்க சிறுகதை

# இதுதான்டா மருமகள்!

தனது மாமியாரால் மிகவும் கொடுமைக்குள்ளான ஒரு இளம்பெண் அழுது புரண்டு தன் கஷ்டம் எல்லாம் தீர்த்திட வேண்டி சிவனை நோக்கி விரதமிருந்து தவமாய் தவம் கிடந்து மெய் வருத்தி நாள்தோறும் பூஜை செய்தாள்.

அவளது தவத்தால் மனம் இரங்கிய சிவபெருமான் ஒரு நாள் அவன் முன் தோன்றி

“மகளே உனது மனவலிமையை மெச்சி மகிழ்ந்தேன்! ஏதாவது ஒரு வரம் கேட்டு பெற்றுக்கொள் என்றார்.

“அப்பனே... எனக்கு ஒரு வரம் போதாது மூன்று வரம் வேண்டும்“ என்று பெண் கெஞ்சினாள்.


பெண் புத்தி பின் புத்தி! உள்ளுக்குள் நகைத்தார் சிவபெருமான்.

“சரி குழந்தாய் ஒரு கண்டிஷனுடன் உனக்கு மூன்று வரங்கள் அளிக்கப்படும். கண்டிஷனை ஏற்றுக் கொள்கிறாயா” என்று கேட்டார்.

அவளோ, அழகாய் சம்மதித்தாள். பகவான் கண்டிஷனை கூறினார்.

“இதோ பார் மகளே! நீ எது கேட்டாலும்







கிடைக்கும்! ஆனால் உனக்கு கிடைப்பதுபோல் உன் மாமியாருக்கு பத்து மடங்கு அதிகமாக கிடைத்துவிடும்...! என்ன சொல்கிறாய்?”

மிக்க மகிழ்ச்சியுடன் முகம்குளிர சம்மதித்தாள் மருமகள்.

விதி யாரை விட்டது என்று எண்ணியபடி அவள் கேட்கும் வரத்தை கொடுக்க தயாரானார் சிவபெருமான்.

முதல் வரம். “எனக்கு 100 கோடி ரூபாய் வேண்டும்“

மாமியாருக்கு ஆயிரம் கோடி கிடைத்தது!

இரண்டாவது வரம் “இந்திய கண்டத்திலேயே மிக அழகிய பெண்ணாக நான் மாறவேண்டும்“

உலகிலேயே அதீத அழகான பெண்ணாக மாமியார் மாறினார்!

மூன்றாவது. “எனக்கு மைல்டாக ஒரு ஹார்ட் அட்டாக் வேண்டும்“

மாமியார் இதயம் வெடித்து செத்தாள். சிவபெருமான் மூர்ச்சையானார்.

யாருகிட்ட... - **ஆசிரியர்**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.


பொறுப்பும்!
பொதுநலமும்!!
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்
4வது மாநில மாநாடு
2019
K.ராமசுப்ரமணியன்
மாநில தலைவர்
முனைவர் ஆ.மவுரியன்
மாநில பொதுச் செயலாளர்
V.அருணாச்சலம்
மாநில ஒருங்கிணைப்பாளர்
V.சங்கர்
மாநில பொருளாளர்
பத்திரிகையாளர்களுக்கு
நலவாரியம் அமைவது
சாதகமா? பாதகமா?
சிறப்புக் கருத்தரங்கம்
நாள்: 15.09.2019 காலை 10 AM - 2 PM
இடம்: டால்ஃபின் பார்க், விருகம்பாக்கம், சென்னை.

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App